பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 25 சனிக்கிழமை 12.11.2022 கதிர் 259

## வாவியில் படகு கவிழ்ந்து மூன்று சிறுமிகள் மாயம்

சூரியவெவ – மஹாவெலிகடஆர வாவியில் சவாரியின் போது படகு கவிழ்ந்ததில் மூன்று சிறுமிகள் காணாமல்போயுள்ளனர்.

இதன்போதுபடகில்8பேர்பயணித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

படகில் பயணம் செய்த 8 மாதக் குழந்தை உட்பட5பேர்அப்பகுதிமக்களால்மீட்கப்பட்டுவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 8

# தமிழக அரசைப் போன்று அரசியல் கைதிகளை விடுவிக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்



## ரணில் அரசிடம் அருட்தந்தை சத்திவேல் வலியுறுத்து

தமிழக அரசைப் போன்று தமிழ் மக்களின் நீண்ட காலக் கோரிக்கையான அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் எனும் குரலுக்குச் செவிமடுத்தும், அரசியல் கைதிகளின் நன்னடத்தையை அடிப்படையாகக் கொண்டும் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய துரித நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டும்.

– இவ்வாறு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா. சத்திவேல் வலியுறுத்தியுள்ளார்.

அவர் இன்று (12) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்குடன் தொடர்புபட்டவர்கள் எனக் குற்றம் சுமத்தப்பட்டு கடந்த 30 வருட காலம் சிறையில் 8

# ஜனாதிபதியின் அழைப்புக்கு கூட்டமைப்பினர் பச்சைக்கொடி

## நிரந்தர அரசியல் தீர்வு வேண்டும் எனவும் வலியுறுத்து




தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணும் வகையில் அரசுடன் பேச்சுநடத்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகவுள்ளது. 2

## ஜனாதிபதிக்கு மனோ எம்.பி. அவசர கடிதம்



மத்திய மாகாண நுவரெலியா, கண்டி, மாத்தளை, ஊவா மாகாண பதுளை, மொனராகலை, சப்ரகமுவ இரத்தினபுரி, கேகாலை, மேல் மாகாண களுத்துறை, தென் மாகாண காலி, மாத்தறை மற்றும் கொழும்பு மாவட்ட அவிசாவளை வரை படர்ந்துள்ள பெருந்தோட்டத்துறை குடியிருப்புக்களை 'நலிவுற்ற' பிரிவாக அறிவித்து, அதற்கான விசேட ஒதுக்கீட்டு வளர்ச்சி திட்டங்கள் அமுல் படுத்த வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவசர கடிதம் எழுதியுள்ளேன். இது தொடர்பான விசேட வாழ்வாதார உதவிகளை இலங்கை அரசுக்கு வழங்கி உதவுங்கள் என இந்திய பிரதமர் நரேந்திர மோடியையும், தமிழக 8

## பிள்ளையுடன்வாழ்வதற்கே உயிருடன் உள்ளேன் நான்

### சாந்தனின் தாயார் உருக்கம்



எனது ஆசை எல்லாம் எனது பிள்ளை நல்லபடியாக என்னிடம் வந்து சேரவேண்டும் என்பதுதான். அவருடன் நான் சிறிதுகாலம் வாழ வேண்டும். அதற்காத்தான் நான் உயிருடன் இருக்கிறேன்.

– இவ்வாறு தெரிவித்தார் இந்தியாவின் முன்னாள் 2

## யாழில் நான்கு வயதுச் சிறுமியை கொடுமைப்படுத்திய தந்தை கைது

நான்கு வயதுச் சிறுமியைக் கடுமையாகத் தாக்கிச் சித்திரவதை செய்த தந்தையை ஊர்காவற்றுறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகரப் பகுதியில் வைத்து இன்று காலை அவர் கைது செய்யப்பட்டார். 2

# 'மலையகத் தமிழர்' என்ற அடையாளத்தை ஒருபோதும் விட்டுக்கொடுக்கவே முடியாது

## ஜனாதிபதி எம்முடனும் பேச வேண்டும் என்கிறார் ராதா



இந்திய வம்சாவளித் தமிழர் அல்லது மலையகத் தமிழர் என்ற அடையாளத்தை எதற்காகவும் விட்டுக்கொடுக்க முடியாது. அடையாளத்தைத் தொலைத்தால் அந்த இனம் அழிந்துவிடும்.

– இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவித்தார்.

அவர்மேலும்கூறியதாவது:–

வடக்கு, கிழக்கு தமிழர் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும், இது தொடர்பில் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தப்படும் என ஜனாதிபதி அறிவித்துள்ளார். இதனை நாம் வரவேற்கின்றோம். 2

## ராஜபக்ஷ அணியுடன் இனிக் கூட்டு இல்லை

### டலஸ் தரப்பு திட்டவட்டம்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியுடன் ஒரு போதும் அரசியல் உறவைப் புதுப்பித்துக் கொள் எப்போவதில்லை என்று டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர 2

## கடலில் வீழ்ந்து மீனவர் மாயம்

பேருவளை – மீன்பிடித் துறை முகத்தில் இருந்து மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் கடலில் விழுந்து காணாமல் போயுள்ளார்.

தலாவிட, எப்பாவல பிரதேசத்தில் வசிக்கும் 8

## போலி உறுதி மூலம் காணி மோசடி: சட்டத்தரணி உட்பட 9 பேர் மறியலில்

யாழ்ப்பாணம் மாநகர் அராலி வீதியில் போலி உறுதி மூலம் காணி மோசடி இடம்பெற்றமை தொடர்பான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சட்டத்தரணி மற்றும் முன்னாள் பாடசாலை அதிபர் உட்பட 9 பேரையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் திருமதி நளினி சுபாஸ்கரன் கட்டளையிட்டார்.

வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள 9 சந்தேகநபர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி, மூத்த சட்டத்தரணிகள் உட்பட 8

## யாழில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பொலிஸார் கூறினர். 4 வயதுச் சிறுமி மூர்க்கத்தனமாகத் தாக்கப்படும் காணொளி சமூக வலைத்தளங்களில் கடந்த ஒரு வாரத்துக்கு முன்பாக வெளியாகியது.

இதையடுத்துத் தாக்கப்பட்ட சிறுமி மற்றும் அவரது தாயாரும் வீட்டிலிருந்து வெளியேறி யாழ்ப்பாணம் பண்ணை பகுதியில் கடந்த திங்கட்கிழமை இருந்துள்ளனர்.

அந்தப் பகுதியால் பயணித்த குடும்ப நல உத்தியோகத்தர் ஒருவர் அந்தச் சிறுமியை இனங்கண்டு விசாரித்துள்ளார். தாம் வீட்டை விட்டு வெளியேறி பாதுகாப்புத் தேடுவதாக தாயார் கூறியதையடுத்து அவர்களை மீட்டு வடக்கு மாகாண சிறுவர் பராமரிப்பு திணைகளத்திடம் குடும்பநல உத்தயோகத்தர் ஒப்படைத்திருந்தார்.

சிறுமிஅவரதுதந்தையாதாக்கப்படும் காணொளி பதிவே சமூக ஊடகங்களில் வெளியாகியதைக் கண்டறிந்த வடக்கு மாகாண சிறுவர் பராமரிப்பு திணைக்கள அதிகாரிகள் ஊர்காவற்றுறை ப் பொலிஸாருக்கு அறிவித்திருந்தனர்.

ஊர்காவற்றுறை – சுருவில் பகுதியில் சிறுமியின் தந்தையைத் தேடிய போதும் அவர் தலைமறைவாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் இன்று காலை யாழ்ப்பாணம் மாநகர பகுதியில் வைத்து சிறுமியைத் தாக்கிய தந்தை ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரை விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறினர்.

மனைவியுடன்ஏற்பட்டமுரண்பாட்டில் மகளைத் தாக்கினேன். அதை அலைபேசியில் காணொளி எடுத்தேன். அந்தக் காணொளி மனைவியின் அலைபேசியிலிருந்து அவரது நண்பிக்குச் சென்றுவிட்டது. அதுவே வெளியாகிவிட்டது – என்று சந்தேகநபர் வாக்குமூலம் வழங்கியுள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

## மலையகத் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த முயற்சியின் ஊடாகத் தீர்வு காணப்பட்டால் நிச்சயம் அது பாராட்டக் கூடிய விடயமாக அமையும்.

மலையகத் தமிழர்கள் இலங்கை வந்து, அடுத்த வருடத்துடன் 200 வருடங்கள் ஆகின்றன. எமது மக்களின் பிரச்சினைகள் ஆமை வேகத்தில்தான் தீர்க்கப்பட்டு வருகின்றன. உரிமைகள்கூட பல வருடங்களுக்குப் பிறகுதான் கிடைக்கப்பெற்று வருகின்றன. எனவே, மலையகத் தமிழ் மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவது குறித்து எம்மையும் அழைத்து ஜனாதிபதி பேச்சு நடத்த வேண்டும்.

மலையகத் தமிழ் மக்களும் இலங்கையர்கள் தான் என்ற வாதம் தவறில்லை. அதற்காக மலையகத் தமிழர் அல்லது இந்திய வம்வாவளித் தமிழர் என்ற அடையாளத்தை நாம் இழந்து விடக்கூடாது.

அமெரிக்காவின் உப ஜனாதிபதி கமலா ஹாரிஸ் தன்னை இந்திய வம்சாவளி என அடையாளப்படுத்துகின்றார். இங்கிலாந்து பிரதமர் ரிஷியும் அப்படிதான். அதேபோல் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஒபாமா தன்னை ஆபிரிக்க வழிவந்தவர் எனக் காட்டிக்கொள்வதில் தயங்குவதில்லை.

இந்திய வம்வாவளி மக்களின் அடையாளமாகவே இலங்கை, இந்திய காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. அதில் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானும் இருந்தார். எனவே, அடையாளத்தைத் தொலைத்துவிட முடியாது – என்றார்.

## ராஜபக்ஷ ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட மேற்படி சபையின் உறுப்பினர் நாடாளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமன கூறியதாவது:-தற்போதைய நாடாளுமன்றம், மக்கள் எதிர்பார்ப்பைப் பிரதிபலிக்கவில்லை. எனவே, புதிய மாற்றமொன்றை மக்கள் வலியுறுத்துகின்றனர். புதியவர்களிடம் ஆட்சியை ஒப்படைக்க வேண்டும் எனக் கருதுகின்றனர். மக்களின் மனநிலை என்னவென்பதை அறிவதற்குக் குறைந்தபட்சம்உள்ளூராட்சிசபைத்தேர்தலாவது நடத்தப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் மக்கள் போராட்டம் வெடிக்கும். தேர்தல் நடைபெற்றால் நாம் வெற்றிபெறுவோம். வெல்லும் அணியில் நாம் பிரதான பங்காளியாக இருப்போம். 'மொட்டு'க் கட்சியுடன் இனி அரசியல் உறவு இல்லை. தேர்தலில் அவர்களுடன் போட்டியிடவும்மாட்டோம் – என்றார்.

## ஜனாதிபதியின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் அடிப்படையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஆரம்பமாகவுள்ள தீர்வுக்கான பேச்சில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்கவுள்ளது என்று கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார்.

எனினும்,தமிழ்மக்களின்அபிலாஷைகளை முழுமையாக நிறைவேற்றும் வகையிலேயே தேசிய இனப்பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில், வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அம்மக்களின் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அடுத்த வாரம் முதல் பேச்சுக்கள் ஆரம்பமாகும் என்று அறிவித்திருந்தார். இதில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றும் ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார்.

## பிள்ளையுடன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுவிக்கப்பட்டுள்ள சாந்தனின் தாயார்.

ராஜீவ் கொலை வழக்கில் ஆயுள் தண்டனைக் கைதிகளாக இருந்து வரும் நளினி, முருகன், ரவிச்சந்திரன், றொபேர்ட் பயஸ், ஜெயக்குமார், சாந்தன் ஆகிய 6 பேரையும் விடுதலை செய்து இந்திய உச்ச நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது.

இது தொடர்பில் சாந்தனின் தாயார் தில்லையம்பலம் மகேஸ்வரி (வயது 75) கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணம், வடமராட்சி – உடுப்பிட்டியில் வசித்து வரும் சாந்தனின் தாயார் மேலும் தெரிவிக்கையில்,

30 வருடங்களாகக் கோயில்களகத் திரிந்து முன்வைத்த வேண்டுதல்களுக்கு இன்று பலன் கிடைத்துள்ளது. எனது மகன் விடுதலையாவதற்குக் காரணமான அனைவருக்கும் நன்றி.

பேரறிவாளனை விடுதலை செய்ததில் இருந்து எனக்குப் பெரும் மன வருத்தமாக இருந்தது. எனது பிள்ளையை எப்போது விடுதலை செய்வார்கள் என்று ஏக்கமாக இருந்தது. அது இப்போதுதான் நிறைவேறியது.

எனது பிள்ளைக்கு இப்போது 53 வயது. 30 வருடங்களைச் சிறையிலேயே தொலைத்துவிட்டார்.

எனது உடல்நிலை சரியில்லை. இல்லையென்றால் நான் சென்று எனது பிள்ளையை அழைத்து வருவேன்.

எனது ஆசை எல்லாம் எனது பிள்ளை நல்லபடியாக என்னிடம் வந்து சேரவேண்டும் என்பதுதான். அவருடன் நான் சிறிது காலம் வாழவேண்டும். அதற்காகத்தான் நான் உயிருடன் இருக்கின்றேன் – என்றார்.

(மேலதிக செய்திகள் 5ஆம் பக்கத்தில்)



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கோட்டாவுக்கு புதிய பதவியா?

ஒளித்து வைக்க இடமில்லை என்பதற்காகத் திருடனைக் கொண்டு போய் தலையாரி வீட்டிலா ஒளித்து வைப்பார்கள்?

அதுபோன்ற ஒரு விடயம் குறித்து தென்னிலங்கை அரசியலில் இப்போது பேச்சடிபடுகின்றது.

தன்னை ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாக நியமிக்குமாறு அரசாங்கத்தின் முக்கிய தரப்பாரிடம் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கோரிக்கை ஒன்றை முன் வைத்திருக்கிறார் என்ற செய்தியே இப்போது கசிந்துள்ளது.

இலங்கையின் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக தமது இரண்டாவது குடியுரிமையான அமெரிக்க பிரஜாவுரிமையைத் துறந்தார் கோட்டாபய ராஜபக்ஷ என்பது தெரிந்ததே.

இப்போது ஜனாதிபதிப் பதவியை விட்டு ஓடித் தப்பி, கொழும்பில் தமது உத்தியோகபூர்வ இல்லத்தில் முடங்கி கிடக்கின்றார் அவர்.

மீண்டும் அமெரிக்கா சென்று மகனுடன் சேர்ந்து வாழ அவர் விரும்புகின்றார். ஆனால் அவருக்கு இப்போது அமெரிக்க விசா மறுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

ஐ.நாவுக்கான நிரந்தரப் பிரதிநிதி நியமனத்தை அவர் பெறுவாராயின், நியூயோர்க் நகரில் அமைந்துள்ள இலங்கையின் ஐ.நா. அலுவலகத்தில் பணியாற்றுவதற்காக அமெரிக்கா அவருக்கு விசா வழங்க வேண்டியிருக்கும்.

அந்தச் சாட்டில் அமெரிக்காவில் தாம் தங்கியிருக்க முடியும் என்று கோட்டாபய எதிர்பார்க்கின்றாராம்.

அதேசமயம் கோட்டாபய ராஜபக்ஷ கொழும்பில் தங்கி இருப்பது மீண்டும் அரசியலில் தங்களுக்கு எதிரான ஒரு முள்ளாக அவர் எழுச்சி பெற வாய்ப்பளிக்கும் என்று கருதும் அரச வட்டாரங்கள் சில, அப்படி ஒரு பதவியைக் கொடுத்தாயினும் அவரை இலங்கையை விட்டு அப்புறப்படுத்தி விட்டால், நீங்கியது ஒரு தொல்லை என்று நிம்மதிப் பெருமூச்சு விடலாம் என கருதுகின்றன எனவும் தெரிகின்றது.

ஆனால் ஐக்கிய நாடுகள் சபை என்பது உலக சமாதானத்துக்கான பொது மன்றம். சர்வதேச அமைதிக்கும், சுபீட்சத்துக்கும், மேம்பாட்டுக்குமாக உழைக்கும் ஓர் உயரிய நிறுவனம்.

சமாதானமாக எதையும் கையாளத் தெரியாத – அமைதி விரும்பியாகத் தம்மை புலப்படுத்தாத –எந்த விடயத்தையும் ராஜதந்திரமாக முன்னெடுக்க முடியாத – தோற்றுப்போன ஜனாதிபதியான – ஒருவரை அத்தகைய ஐ.நா. நிரந்தரப் பிரதிநிதி பதவிக்கு நியமிப்பது ஐ.நாவையும் கேலி செய்வதாக அமையும், இலங்கையையும் சர்வதேசம் ஏளனமாக நோக்கும் நிலைமையை ஏற்படுத்தும் என்று விடயம் அறிந்த வட்டாரங்கள் விசனம் தெரிவிக்கின்றன.

விவசாய நாடான இலங்கையின் விவசாயத்துக்குரிய உரப்பாவனை குறித்து தீர்க்கதரிசனமாக ஒரு முடிவு எடுக்காமல், வழமையான 'சண்டைக் கப்பல்' பாணியில் தீர்மானம் எடுத்த, நிர்வாகத்துறையில் ஒரு கட்டுக்குட்டியை ஐ.நா நிரந்தரப் பிரதிநிதி பதவிக்கு நியமிப்பது குறித்து பரிசீலிப்பதே அபத்தம்.

ஈழ யுத்தத்தையும் கூட, அப்படி முட்டாள்தனமாகவும் முரட்டுத்தனமாகவுமே அவர் கையாண்டார். சர்வதேசம் தனது பார்வையைத் தீவிரப் படுத்தாமலும், நாட்டின் பௌத்த, சிங்களப் பேரினவாத அதிகார பீடம் அவரின் கொடூரப் போக்கை அங்கீகரித்து, ஆதரவு தந்து நிற்பதாலும், யுத்த விடயங்களில் இன்னும் 'வெளியே' இருக்கிறார் கோட்டாபய.

ஐ.நாவுக்கு இலங்கை அவரை நியமிப்பது என்பது, நாட்டுக்கு சனிப் பிடிக்கும் விவகாரமாகத்தான் மாறும்.



## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டுடனான 'அபிவிருத்திக்கான அதிகாரப் பகிர்வு' செயலமர்வு!

கொழும்பு இளைஞர் பௌத்த சங்கம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்து ஏற்பாடு செய்த 'அபிவிருத்திக்கான அதிகாரப் பகிர்வு' தொடர்பான செயலமர்வு, கொழும்பு இளைஞர் பௌத்த சங்கத்தின் சபை அறையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பங்குபற்றிய அனைவருக்கும் அபிவிருத்தியும் அதிகாரபகிர்வு தொடர்பாக பல சந்தேகங்களுக்கான விளக்கங்களும் தெளிவூட்டல்களும் வழங்கப்பட்டன.

மற்றும் இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர், முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முன்னாள் மாகாண சபைகளுக்கான அமைச்சின் செயலாளர், சமூக ஆர்வலர்கள் மற்றும் பல அமைப்புக்களை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டார்கள்.

இதன்போது கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அபிவிருத்தியும் அதிகாரப்பகிர்வு தொடர்பாக பலருக்கு சந்தேகம் உள்ளது. அதிலும் தென் இலங்கையை சேர்ந்தவர்களுக்கு இது தொடர்பான பல விளக்கங்களையும் தெளிவூட்டல்களையும் வழங்குவதற்கு என இந்த நிகழ்வு ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது.

இலங்கை முழுவதுமாக காணப்படும் அரசியல் தீர்வு அதிகாரப் பகிர்வு மற்றும் இவற்றினூடான பொருளாதார அபிவிருத்தி என்பன சம்பந்தமாக சேவையாற்றும் 280 அமைப்புக்களை மிக விரைவாகவும் துரிதமாகவும் சந்தித்து இவ்வாறான நடவடிக்கைகளை மேலும் துரிதப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தனர்.

## பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் சோதனை நடவடிக்கைகள்!

பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ள நிலையில் பருத்தித்துறை பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

போதைப் பாவனை அதிகரித்துள்ளதாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து மோப்ப நாய் சகிதம் பொலிஸார் இந்த தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பருத்தித்துறை சந்தை, ஓட்டோத் தரிப்பிடம், மந்திகைச் சந்தை, மந்திகை வைத்தியசாலை வீதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் இந்தச் சோதனை நடவடிக்கை பருத்தித் துறை பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பரிசோதகர் பியந்த அமரசிங்க தலைமையில் இடம்பெற்றது.

## கிளிநொச்சி காஞ்சிபுரம் பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தினால் 32 குடும்பங்கள் பாதிப்பு!

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட காஞ்சிபுரம் பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தினால் 32 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை பெய்த பலத்த மழை காரணமாக சில வீடுகளுக்குள் வெள்ள நீர் உட்புகுந்துள்ளது. இதனால் மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். இதேவேளை போக்குவரத்து செய்வதிலும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

இதேவேளை, அந்தக் கிராமத்தை 6 மாதங்களாக கிராம சேவையாளர் கண்காணிக்கவில்லை எனவும், வெள்ளம் தொடர்பில் அறிவிக்க அழைப்பு ஏற்படுத்திய போதும், அழைப்பை ஏற்கவில்லை எனவும் மக்கள் குற்றச்சாட்டுகின்றனர்.

இந்த நிலையில், பிரதேச செயலாளருக்கு மக்கள் தகவல் வழங்கியுள்ளனர். கள விஜயம் மேற்கொண்டு கண்டாவளை பிரதேச செயலாளர் த. பிருந்தாகரன் நிலைமைகளை ஆராய்ந்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலக தரிசனம் நிறுவனத்தின் உதவியுடன் உடனடி உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன. வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள், உறவினர் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அந்தப் பகுதியில் வெள்ள நீர் தேங்காத வகையில் வடிகான்களை அமைக்க மக்கள் வேண்டுகை விடுத்துள்ளனர்.

## புதிதாக நியமனம் பெற்றுள்ள இலங்கைக்கான ஏழு தூதுவர்கள் நற்சான்றிதழ்கள் கையளிப்பு!

புதிதாக நியமனம் பெற்றுள்ள இலங்கைக்கான ஏழு தூதுவர்களும் ஓர் உயர்ஸ்தானி கரும் நேற்று (வெள்ளிக்கிழமை) முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் தமது நற்சான்றிதழ்களைக் கையளித்தனர்.

அதன்படி, அண்மையில் புதிதாக பதவியேற்றுக் கொண்ட இலங்கைக்கான மெக்சிக்கோ தூதுவர் பெற்றிக்கோ சலஸ் லொபிற், இலங்கைக்கான பூட்டான் தூதுவர் ரிஞ்சன் குயென்சில், இலங்கைக்கான பரகுவே தூதுவர் ஃப்ளெமிங் ரால் டுவார்டே, இலங்கைக்கான லக்சம்பர்க் தூதுவர் பெக்கி ஃபிரான்ட்சன், இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் டிகாறியன், இலங்கைக்கான ஓமான் தூதுவர் அகமது அலி சயீத் அல் ரஷ்தி, இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன்–பிரான்கோயிஸ் பேக்டெட் மற்றும் இலங்கைக்கான கானாவின் உயர்ஸ்தானிகர் குவாகு அசோமா செரேமே ஆகியோரே நேற்று ஜனாதிபதியை சந்தித்து தமது நற்சான்றிதழ்களைக் கையளித்தனர்.

# பயங்கரவாதி ஒருவரின் கத்திக்குத்தில் பெல்ஜியம் பொலிஸ் அதிகாரி மரணம்




பிரசில்ஸ், நவ.12

பெல்ஜியம் தலைநகர் பிரசில்சின் ர்க்பீக் பகுதியில் நேற்று இரவு இரு பொலிஸார் வழக்கமான ரோந்து பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது அங்கு கத்தியுடன் வந்த நபர் பொலிஸார் மீது சரமாரி தாக்குதல் நடத்தினார். இந்தத் தாக்குதலினால ஒரு பொலிஸ் உத்தியோக்தர் உயிரிழந்துள்ளார். இன்னொருவர் காயமடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

பணியில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தரின் கழுத்தில் அந்நபர் கத்தியால்குத்தியுள்ளார். இதில், அந்த பொலிஸ் அதிகாரி சம்பவ இடத்திலேயே இரத்த வெள்ளத்தில் சுருண்டு விழுந்தார். பின்னர் மற்றொரு பொலிஸ் அதிகாரி மீதும் அந்த நபர் தாக்குதல் நடத்த முற்பட்டார். அப்போது, அந்த பொலிஸ் அதிகாரி தான் வைத்திருந்த துப்பாக்கியை கொண்டு தாக்குதல் நடத்திய நபரை சுட்டார். இந்தத் துப்பாக்கிச்சூட்டில் கத்திக்குத்து தாக்குதல் நடத்திய நபர் சுருண்டு விழுந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து தகவலறிந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து

சென்று படுகாயமடைந்த இரு பொலிஸாரையும் மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். ஆனால், கத்திக்குத்து தாக்குதலுக்கு உள்ளான ஒரு பொலிஸ் அதிகாரி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மற்றொரு பொலிஸ் அதிகாரிக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தாக்குதல் நடத்திய நபரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இதனிடையே, கத்திக்குத்து தாக்குதல் நடத்தியபோது 'கடவுளே சிறந்தவன்' என்று அரேபிய மொழியில் கூறுக்கொண்டு அந்த நபர் தாக்கினார் எனத் தகவல் வெளியாகியுள்ளது. மேலும்,

இந்தக் கத்திக்குத்துச் சம்பவம் பயங்கரவாதத் தாக்குதல் எனப்பெல்ஜியம் அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மேலும் 40 கோடி டொலர் இராணுவ உதவியை உக்ரைனுக்கு வழங்குவதற்கு அமெரிக்கா முடிவு





வாஷிங்டன், நவ.12

உக்ரைன் – ரஷ்யா இடையிலான போரில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா தொடர்ந்தும் செயற்பட்டு வரும் நிலையில் மேலும் இராணுவ உதவிகளுக்காக 40 கோடி டொலர்களை வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா தொடங்கிய போர் 8 மாதங்களைக் கடந்து தொடர்ந்து நீடித்து வருகின்ற நிலையில் இந்தப் போரில் உக்ரைனின் பல்வேறு நகரங்கள் சின்னபின்னமாகியுள்ளன. பல நகரங்களை ரஷ்யா தன்வசப்படுத்தியுள்ளது. ஆனாலும் உக்ரைன் இராணுவம் துணிச்சலுடன் தொடர்ந்து ரஷ்ய படைகளை எதிர்த்து சண்டையிட்டு வருகின்றத். உக்ரைனுக்கு உதவியாக அமெரிக்கா மற்றும் பலமேற்கத்திய நாடுகள் ராணுவம் மற்றும் பொருளாதார ரீதியான உதவிகளை செய்து வருகின்றன.

அந்த வகையிலேயே போர் தொடங்கியதில் இருந்து இதுவரை உக்ரைனுக்கு அமெரிக்கா

பல ஆயிரம் கோடி டொலர் மதிப்பிலான இராணுவ உதவிகளை வழங்கியுள்ளது. அதன் தொடர்ச்சியாக தற்போது மேலும் 40 கோடி டொலர் மதிப்புடைய இராணுவ உதவிகளை உக்ரைனுக்கு அமெரிக்கா அனுப்பவுள்ளது. அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் இதனை தெரிவித்தார்.

புதிதாக வழங்கப்படும் இந்த இராணுவ உதவி தொகுப்பில் முதல் முறையாக அதிநவீன

வான்பாதுகாப்பு அமைப்பு, ரஷ்யாவுக்கு எதிரான தனது பதில் தாக்குதலில் உக்ரைன் வெற்றிகரமாகப் பயன்படுத்தி வரும் ஹிமார்ஸ் எனப்படும் அதீத சக்தி கொண்ட பீரங்கி ரொக்கெட் அமைப்பு உள்ளிட்ட ஏராளமான ஆயுதங்கள் அடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே உக்ரைனுக்கு வழங்குவதற்காக தென்கொரியாவிடம் இருந்து சுமார் 1 லட்சம் ஹோவிட்சர் பீரங்கி குண்டுகளை அமெரிக்க வாங்க இருப்பதாகவும், இது தொடர்பாக அமெரிக்கா – தென்கொரியா அரசுகள் சிலகாலமாக ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ளன எனவும் அமெரிக்க இராணுவத்தின் மூத்த அதிகாரிகள் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



## முக்கிய பயங்கரவாதத் தலைவர் பாகிஸ்தானில் சுட்டுக் கொலை!

பாகிஸ்தானில் பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தேடப்பட்டு வந்த பயங்கரவாதக் குழுவொன்றின் தளபதி நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தானின் வடமேற்கு பகுதிகளில் பாகிஸ்தான் தெஹ்ரீக்–இ–தலீபான்ப்பயங்கரவாதிகள் கடும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இவர்கள் இராணுவ வீரர்கள் மற்றும் பொலிஸாரைக் குறிவைத்துத் தொடர்ச்சியாகப் பயங்கரவாதத் தாக்குதல்களை அரங்கேற்றி வருகின்றனர். இந்த நிலையில் பாகிஸ்தானின் வடமேற்கு மாகாணமான கைபர் பக்துங்வாவில் உள்ள

மர்தான் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு பயங்கரவாத எதிர்ப்புப் படை பொலிஸார் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு பதுங்கியிருந்த பயங்கரவாதி ஒருவர் பொலிஸாரை நோக்கித் துப்பாக்கித் தாக்குதல் நடாத்தியுள்ளார். அதை தொடர்ந்து பொலிஸார் நடத்திய பதில் தாக்குதலில் அந்த பயங்கரவாதி சுட்டுக்கொல்லப்பட்டார்.

துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த அந்த பயங்கரவாதி பொலிஸாரால் தேடப்பட்டு வந்த பாகிஸ்தான் தெஹ்ரீக்–இ–தலீபான் பயங்கரவாத இயக்கத்தின் தளபதி மெஹ்முத் என்கிற ஒடைத் என்பது தெரியவந்தது. மர்தான் மாவட்ட பொலிஸ் உயர் அதிகாரியின் கொலை உள்பட பல்வேறு பயங்கரவாதத் தாக்குதல்களில் தொடர்புடைய ஒடைத் தலைக்கு கைபர் பக்துங்வா மாகாண அரசு ரூ.50 லட்சம் பரிசு அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# அடுத்தவருடம் ஐரோப்பாவில் அதிகளவில் இயற்கை எரிவாயு தட்டுப்பாட்டுக்கு வாய்ப்பு!




பாரிஸ், நவ.12

ஐரோப்பாவில் எதிர்வரும் வரும் 2023 ஆம் ஆண்டு சுமார் 3 ஆயிரம் கோடி கன மீட்டர் அளவிலான இயற்கை எரிவாயு பற்றாக்குறை ஏற்படக்கூடும் என சர்வதேச எரிசக்தி நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த அபாயத்தை தவிர்க்கும் வகையில் ஐரோப்பிய நாடுகள் உடனடி மாற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அந்நிறுவனம் வலியுறுத்தியுள்ளது.

மேலும் உலகளாவிய எரிசக்தி நெருக்கடியில் பல்வேறு நாடுகளின் அரசுகள் அவசர நடவடிக்கைகளை எடுத்து இயற்கை எரிவாயுவின் பயன்பாட்டை குறைக்க வேண்டும் என

அறிவுறுத்தப்பட்டுள்ளன. உக்ரைன் மீதான போர் காரணமாக ரஷ்யா மீது ஐரோப்பிய நாடுகள் விதித்த பொருளாதார மற்று வர்த்தக தடைகளின் எதிரொலியாக, ஐரோப்பாவிற்கு தேவையான இயற்கை எரிவாயுவை ரஷ்யா விநியோகிக்கும் வாய்ப்பு குறைவு என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் ஐரோப்பாவின் இயற்கை எரிவாயு கையிருப்பில் 65 சதவீதம் மட்டுமே இருக்கும் என்று சர்வதேச எரிசக்தி நிறுவனம் கணித்துள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கு முன்பு வரை ஐரோப்பிய ஒன்றியம் பெரும் அளவிலான இயற்கை எரிவாயுவை ரஷ்யாவிடம் இருந்து இறக்குமதி செய்து வந்த நிலையில்,ரஷ்யா – உக்ரைன் போருக்குப்பின் இது 9 சதவீதம் குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# புழல், வேலூர் சிறைகளில் இருந்து இன்று மாலை முருகன் உள்பட நால்வர் விடுதலையாகின்றார்கள்!



ராஜிவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் இருந்தவர்களை விடுவித்து இந்திய உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அடுத்து இன்று மாலையில் புழல் சிறையில் இருந்து ராபர்ட் பயாஸ், ஜெயக்குமார் ஆகியோரும், வேலூர் சிறையில் இருந்து முருகன், சாந்தன் ஆகியோரும் விடுதலை ஆகிறார்கள். நளினியும், ரவிச்சந்திரனும் பரோலில் வெளியே வந்து இருக்கிறார்கள்

விடுதலையாகும் 6 பேரில் முருகன், சாந்தன், ராபர்ட் பயாஸ், ஜெயக்குமார் ஆகிய 4 பேரும் இலங்கையை சேர்ந்தவர்கள். 4 பேரில் சாந்தன் மட்டும் இலங்கை செல்ல விருப்பம் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தபோது கடந்த 1991ஆம் ஆண்டு ஸ்ரீபெரும்புதூரில் வைத்து மனித வெடிகுண்டு தாக்குதலில் கொல்லப்பட்டார். ராஜீவ் காந்தியுடன் 15 பேரும் உயிரிழந்தனர். விடுதலைப. புலிகள் அமைப்பினரே ராஜீவ் காந்தியை கொலை செய்தனர் எனக் குற்றம் சாட்டப்பட்டது.

ராஜீவ் கொலை வழக்கில் 41 பேர் மீது குற்றம்சாட்டப்பட்டு வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது. சி.பி.ஐ. சிறப்பு புலனாய்வு குழு நடத்திய இந்த விசாரணையில் பேரறிவாளன், முருகன், நளினி, சாந்தன், ராபர்ட் பயாஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் உள்பட 26 பேருக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்குகளில் படிப்படியாக பலரது தண்டனை குறைக்கப்பட்டது. ஆனால் பேறறிவாளன் உள்பட 7 பேரின் தூக்கு தண்டனை குறைக்கப்படாமல் இருந்தது. தூக்கு தண்டனையும், பின்னர் ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது.

இதன்பிறகு நீண்ட நாள்களாகச் சிறையில் இருப்பதைக் காரணம் காட்டி தன்னை விடுதலை செய்ய வேண்டும் என்று பேறறிவாளன் தொடர்ந்த வழக்கை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு கடந்த மே மாதம் பேரறிவாளனை விடுதலை செய்தது.

இதனைத் தொடர்ந்து நளினி, ரவிச்சந்திரன் ஆகியோர் தங்களை விடுவிக்கக்கோரி வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்குகளையும் விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு நேற்று பரபரப்பான தீர்ப்பை வழங்கியது. நளினி, முருகன், ரவிச்சந்திரன், சாந்தன், ராபர்ட் பயாஸ், ஜெயக்குமார் ஆகிய 6 பேரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தது.

இதன்மூலம் 31 ஆண்டுகளாக சிறையில் வாடிய 6 பேரும் சிறை வாழ்க்கையில் இருந்து விடுபட்டு சுதந்திர காற்றை சுவாசிக்கும் நிலை ஏற்பட்டு உள்ளது.

ராஜீவ் கொலை வழக்கில் பேரறிவாளன் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில், மீதமுள்ள 6 பேரும் தற்போது விடுதலை செய்யப்பட்டு இருப்பதன் மூலம் ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் நடத்திய சட்ட போராட்டமும் முடிவுக்கு வந்துள்ளது.

ராஜீவ் கொலை வழக்கில் 6 பேரையும் விடுதலை செய்து சுப்ரீம் கோர்ட்டு பிறப்பித்துள்ள உத்தரவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வரவேற்றுள்ளார். தமிழக அரசியல் கட்சிகள் பலவும் வரவேற்பு தெரிவித்துள்ளன. 6 பேரும் விடுதலை செய்யப்பட்டமையைப் பல இடங்களில் மக்கள் பட்டாசு வெடித்து கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். இனிப்புகளும் வழங்கப்பட்டன.

சுப்ரீம் கோர்ட்டின் உத்தரவு நகலை 6 பேரின் வழக்கறிஞர்களும் இன்று பெற்றுக்கொள்கிறார்கள். இதன் பின்னர் 6 பேரையும் விடுதலை செய்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதைத் தொடர்ந்து இன்று மாலையில் புழல் சிறையில் இருந்து ராபர்ட் பயாஸ், ஜெயக்குமார் ஆகியோரும், வேலூர் சிறையில் இருந்து முருகன், சாந்தன் ஆகியோரும் விடுதலை ஆகிறார்கள்.

நளினியும், ரவிச்சந்திரனும் பரோலில் வெளியே வந்து இருக்கிறார்கள். நளினி வேலூரில் வசித்து வருகிறார். ரவிச்சந்திரன் மதுரை அருப்புக்கோட்டையில் வசித்து வந்தார். இவர் தற்போது விளாத்திகுளம் அருகே உள்ள சூரப்ப நாயக்கன் பட்டியில் வசித்து வருகிறார். இவர்கள் இருவருக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டு இருக்கிறது.

விடுதலைக்கான உத்தரவு வந்த பின்னர் இவர்களுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்படும்.

மற்ற 4 பேரும் சிறையில் இருந்து வெளியில் வருகிறார்கள். விடுதலையாகும் 6 பேரில் முருகன், சாந்தன், ராபர்ட் பயாஸ், ஜெயக்குமார் ஆகிய 4 பேரும் இலங்கையை சேர்ந்தவர்கள். இவர்கள் இலங்கைக்கு செல்வார்களா? இங்கேயே தங்கி இருப்பார்களா? என்கிற கேள்வி எழுந்திருந்தது. ஆனால் இவர்கள் 4 பேரில் சாந்தன் மட்டும் இலங்கை செல்ல விருப்பம் தெரிவித்துள்ளார். மற்ற 3 பேரும் தமிழகத்திலேயே தங்கி இருக்க முடிவு செய்து உள்ளனர்.

இதை தொடர்ந்து அவர்கள் தங்கப்போகும் பகுதியில் உள்ள காவல் நிலையத்தில் தகவல் தெரிவித்துவிட்டு தங்கி கொள்ளலாம் என்கிற விதி உள்ளது. இதன்படி தமிழகத்தில் மட்டும் ஆயிரக்கணக்கான இலங்கை அகதிகள் தங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.

## ரவிச்சந்திரனின் தாயாரும் தீர்ப்புக் குறித்து மகிழ்ச்சி




ராஜிவ் காந்தி கொலை வழக்கில் சிறைவாசம் அனுபவித்து வந்த ஆறு பேரும் விடுவிக்கப்பட்டமையை அவர்களில் ஒருவரான ரவிச்சந்திரனின் தாயார் ராஜேஸ்வரி மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

ரவிச்சந்திரன் என்பவருக்குச் சொந்த ஊர் தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள சூரப்பன் நாயக்கன்பட்டி ஆகும். இவர் தற்போது பரோலில் இருந்து வருகிறார். அவர் விடுதலை செய்யப்பட்டமையைத் தொடர்ந்து அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் இனிப்பு வழங்கி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

விடுதலை குறித்து ரவிச்சந்திரனின் தாயார் ராஜேஸ்வரி நிருபர்களிடம் கூறியதாவது:- பல ஆண்டுகள் சிறைக்கு பின்னர் ரவிச்சந்திரன் விடுதலை செய்யப்பட்டமை மகிழ்ச்சி அளிக்கிறது. 7 பேர் விடுதலைக்காக தமிழக ஆளுநர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தமிழக அரசுதான் நடவடிக்கை எடுத்தது. இதற்காக தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து நன்றி தெரிவிக்க உள்ளோம். ரவிச்சந்திரன் எதிர்காலம் குறித்து அவர்தான் முடிவு செய்ய வேண்டும். – இவ்வாறு அவர் கூறினார்.

## மனைவி நளினியுடன் தங்கியிருக்க விடுதலையாகும் முருகன் தீர்மானம்



வேலூர் ஜெயிலில் உள்ள முருகன் மற்றும் சாந்தனை சத்துவாச்சாரியை சேர்ந்த வழக்கறிஞர் ராஜகுரு நேற்று மாலை சந்தித்து பேசினார். அப்போது விடுதலை குறித்த விவரத்தை அவர்களிடத்தில் அவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு குறித்து வக்கீல் ராஜகுரு கூறியதாவது:-

விடுதலை குறித்து தகவல் அறிந்த இருவரும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். முதலில் சாந்தனை சந்தித்தேன். பின்னர் முருகனை சந்தித்தேன். அதைத்தொடர்ந்து இருவரிடமும் பேசினேன். விடுதலைக்காக நடவடிக்கை மேற்கொண்ட வக்கீல்கள், தமிழக முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின், சுப்ரீம் கோர்ட்டுக்கு தங்களது நன்றியை தெரிவித்தனர்.

முருகன் வெளியே வந்த பின்னர் தனது மனைவி நளினியுடன் தங்கியிருக்க போவதாக உருக்கமாக தெரிவித்தார். மேலும் குடும்பத்தினருடன் ஆலோசனை செய்து தமிழகத்தில் தங்கியிருப்பதா? லண்டன் அல்லது செல்வது குறித்து முடிவெடுப்பேன் என முருகன் தெரிவித்தார்.

## விடுவிக்கப்பட்டதும் சாந்தன் இலங்கை மீள விரும்புகிறார்



வேலூர்,நவ.12

வேலூர் ஜெயிலில் சாந்தனை வக்கீல் ராஜகுரு சந்தித்து பேசினார். அப்போது சாந்தன் வெளியே வந்த பிறகு தமிழகத்தில் உள்ள முக்கிய கோவில்களுக்கு சென்று வழிபட உள்ளார். அதைத் தொடர்ந்து தனது சொந்த நாடான இலங்கைக்கு செல்ல உள்ளார் எனத் தெரிவித்துள்ளார். ஆனால் அவரது பாஸ்போர்ட் காலாவதியாகிவிட்டது. எனவே பாஸ்போர்ட்டை புதுப்பிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் உள்ள சாந்தனின் தாயார் தில்லையம்பலம் மகேஸ்வரி (வயது 75) கூறியதாவது:-

30 ஆண்டுகளாக பிரிந்து இருந்த எனது மகனை தற்போது மத்திய அரசு விடுதலை செய்து அறிவித்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.


இதற்காகப் பாடுபட்டு அத்தனை காலம் உழைத்த அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வளவு பேரும் சேர்ந்துதான் எனது பிள்ளையின் விடுதலைக்கு வழி செய்திருக்கிறீர்கள். தமிழக அரசுக்கும் மற்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பாக நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம். நாங்கள் எப்போதும் இந்த நன்றியை மறக்க மாட்டோம். எனக்குத்தான் இந்த அதிர்ச்சியை தாங்க முடியவில்லை.

இருந்தாலும் நலமாக உள்ளேன். எனது பிள்ளை என்னோடு வந்து சேர்ந்துவிடுவான் என உறுதியாக உள்ளேன். – இவ்வாறு அவர் கூறினார்.

# மட்டக்களப்பில் ஊடகவியலாளருக்கு திறன் விருத்திப் பயிற்சிச் செயலமர்வு!





(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட ஊடகப் பிரிவுடன் இணைந்து, மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வரும் 'லிப்ட்' நிறுவனத்தினால் மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலார்களுக்காக நடாத்தப்பட்ட திறன் விருத்தி மற்றும் பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி செயலமர்வு நேற்று மட்டக்களப்பு நொச்சிமுனையிலுள்ள தனியார் விடுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஊடகவியலாளர்களைப் பயிற்றுவித்து, அவர்கள் மூலமாக இளைஞர், யுவதிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இத்தி ட்டம் செயற்படுத்தப்படுவதாக 'லிப்ட்' நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் திருமதி ஜானு முரளிதரன் தெரிவித்தார்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் சமூக மேம்பாட்டில் அக்கறையுள்ள 20 ஊடகவியலா ளர்கள் முதல் கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டிருந்த னர். இவர்களுக்கு மூன்று நாள் பயிற்சி வழங் கப்படவுள்ளதோடு, மேலும் 40 ஊடகவியலாளர்க ளுக்கு இரண்டு கட்டங்களில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக மட் டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப் பிள்ளை கருணாகரனும், சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஏ.நவேஸ்வரன், மட்டக்களப்பு மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார், 'ஹெல்வெரஸ்' நிறுவன திட்ட உத்தியோகத்தர் என்.ரமேஷ், மட்டக்களப்பு மாவட்டத் தகவல் திணைக்களப் பொறுப்பதிகாரி வ.ஜீவானந்தன், மனிதநேய தகவல் குறிப்பு (மதகு) நிறுவன பணிப்பாளர் சபை அங்கத்தவர் எபநேசர் தா்ன், 'லிப்ட்' நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜானு முரளிதரன் மற்றும் 'லிப்ட்' நிறுவன திட்ட இணைப்பாளர் வீ.கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்விற்கு வளவாளர்களாக பெண் மனித உரிமைச் செயற்பாட்டாளரும், பயிற்றுவிப் பாளருமான நளினி ரெட்ணராஜா ம ற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.எம்.பஹீஜ் ஆகியோர் கலந்து கொண்டு முதல் நாள் நிகழ்வில் பயிற்சிகளை உரியவாறு வழங்கினர்.



## முறக்கொட்டான்சேனையில் நேற்றிரவு ரயிலுடன் மோதுண்டு இளைஞன் சாவு

(எச்.எம்.எம்.பர்ஸான்)

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கி நேற்றிரவு சென்ற ரயிலுடன் மோதி இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளான்.

இந்தச் சம்பவம் சித்தாண்டி – முறக்கொட்டான்சேனை தேவபுரம் எனும் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்த இளைஞன் சித்தாண்டி – 1, அலைம கள் வீதியைச் சேர்ந்த 25 வயதுடைய சிவகுமார் குவேந்திரன் என்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்துள்ள இளைஞனின் உடல் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை சந்திவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருகோணமலையில் சாரணரின் ஒன்று கூடலும் திறன்விருத்தியும்













(இரா.ரஜீந்திரமூர்த்தி)

திருகோணமலையில் சாரணர் ஒன்றுகூடலும், செயற்பாட்டுத் திறன்விருத்தியும் திருகோணமலை விபுலானந்தா கல்லூரியில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை4.30 மணிக்கு திருகோணமலை மாவட்ட சாரண ஆணையாளர் சி.சசிகுமார் தலைமையிலும் ,உதவி மாவட்ட ஆணையார் ரூ.ஜனோச்சின் ஒழுங்குபடுத்தலி லும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பிரதம விருந்தினராக திருகோணமலை மாவட்டக் கிளையின் நிறைவேற்றுக் குழுத்தலைவர் வ.கலைச் செல்வனும், சிறப்பு விருந்தினராக திருகோணமலை வலயக்கல்வி அலுவலகக் கணக்காளர் நிமலேஸும் கலந்து சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்வில் பாடசாலை ரீதியாக 11 மாணவ குழுக்கள் அடங்கலாக 450 சாரணர்களும், 34 சாரணர் தலைவர்களும்,12 உதவி மாவட்ட ஆணையர்களும் பங்கு கொண்டு மழையுடனான காலநிலையிலும் தங்களுக்கான பாசறைகளை அமைத்து செயற்பாட்டை முன்னெடுத்திருந்தார்கள்.

இந்த ஒன்றுகூடலின் நிகழ்வுகளாக சாரணர் கைத்தி றன் மற்றும் அணிநடை, முகாம் பரிசோதனை, தீப் பாசறை ஆகியவற்றுடன் சிறந்த குழுத் தேர்வு, சேவை வார நிதி சேமிப்பு குழு தேர்வு,சமூக சேவைத் திட்டம் உள்ளடங்கலாக பல செயற்பாடுகள் இடம்பெற்று நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் குருளை சாரணர்களின் பங்குபற்றுதலுடன் ஒன்றுகூடல் நிறைவுபெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# தகவல்துறையில் சாதிக்க விரும்புபவர்களுக்கு வாய்ப்பளிக்கும் சேல்ஸ்போர்ஸ் நிறுவனத்தினர்!

(இ.கலையமுதன்)

இலங்கையின் மென்பொருள் பொறியியலாளர்கள் மற்றும் மென்பொருள் வல்லுநநர்களுக்கு உலக சந்தையில் நன் மதிப்பும் அதிக கேள்வியும் உள்ளதென தெரிவித்த யாழ் சேல்ஸ்போர்ஸ் ஒஹானா நிறுவனத்தினர், தகவல் தொழில்நுட்ப துறையில் சாதிக்க விரும்புபவர்களுக்கும், இத்துறையைத் தமது எதிர்காலமாக கொள்ள எதிர்பார்ப்பவர்களுக்கும், தகவல் தொழில்நுட்ப வேலை வாய்ப்புகள் மற்றும் தொழில் முயற்சியில் ஈடுபட விரும்புவர்களுக்கும் இது ஒரு மகத்தான வாய்ப்பு ஆகும் என்றனர்.




யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தனர்.

மேலும் தெரிவிக்கையில் –

சேல்ஸ்போர்ஸ் என்பது அமெரிக்காவைத் தளமாக கொண்டு இயங்கும் மென்பொருள் நிறுவனமாகும். உலகம் முழுவதும் சேல்ஸ்போர்ஸ் நிறுவனத்துக்காக பல மென்பொருள் பொறியியலாளர்கள் வேலை செய்கிறார்கள். அதே போன்று யாழ்ப்பாணத்தில் இருந்து சேல்ஸ்போர்ஸ் நிறுவனத்துக்காக மற்றும் சேல்ஸ் போர்ஸ் சார்ந்த இதர நிறுவனங்களுக்காக வும் வேலை செய்யும் மென்பொருள் பொறியியலாளர்களால் தன்னார்வமாக தொடங்கப்பட்டதே யாழ் சேல்ஸ் போர்ஸ் ஒஹானா ஆகும்.

இந்த அமைப்பு இலங்கையில் சட்ட ரீதியாக பதிவு செய்யப்பட்ட ஓர் இலாப நோக்கற்ற அமைப்பாகும். யாழ். சேல்ஸ்போர்ஸ் ஒஹானா தொடங்கப்பட்டு இவ்வருடத்துடன் மூன்று வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், சேல்ஸ்போர்ஸ் மென்பொருள் பொறியியலாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் என பலதரப்பட்டவர்களை தன்னுடன் இணைத்துக் கொண்டு வெற்றிகரமாக இயங்கி வருகிறது.

இலங்கையின் மென்பொருள் பொறியியலாளர்கள் மற்றும் மென்பொருள் வல்லுநர்களுக்கு உலக சந்தையில் நன் மதிப்பும் அதிக கேள்வியும் உள்ள நிலையில், இந்த சேல்ஸ்போர்ஸ் மென்பொருள் வல்லுநர்களுக்கு மற்றைய மொழிகளை விட அதிக வாய்ப்புகளும் கேள்விகளும் காணப்படுகின்றன. இந்த நிலையில் சேல்ஸ்போர்ஸ் தொழில்நுட்பம் பற்றிய அறிவும், தெளிவும் எமது நாட்டில் குறைவாகவே உள்ளன. எமது வடக்கு கிழக்கு பகுதிகளும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆகவே இந்த தொழில்நுட்பத்தைப் பற்றிய தெளிவினையும் அது பற்றிய வாய்ப்புக்களையும் தெரியப்படுத்தி விழிப்புணர்வை எல்லோரிடமும் ஏற்படுத்தும் நோக்குடன் நாம் பல்வேறு செயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறோம். இந்த வகையில் மாதாந்த சந்திப்புகள், பயிற்சிப் பட்டறைகள், தனியார், அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் விழிப்புணர்வு நிகழ்வுகள், வேலை வாய்ப்பு வழிகாட்டல்கள் போன்ற செயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறோம்.

இதன் அடுத்த கட்ட முயற்சியாக ஹக்போர்ஸ் எனப்படும் மென்பொருள் தயாரிப்பு போட்டி இடம்பெற்று வருகின்றது. கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த போட்டியிலே பங்குபற்றும் அணிகள் சேல்ஸ்போர்ஸ் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உலக பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கக் கூடியதான மென்பொருள்களை உருவாக்க வேண்டும். சென்ற வருடம் நடைபெற்ற போட்டியில் 30 இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குபற்றி, 10 அணிகள் இறுதிப் போட்டிக்கு தெரிவாகி இருந்தன. இறுதிப்போட்டியில் பங்கு பற்றிய அணிகளில் சிறப்பான 3 அணிகள் தெரிவு செய்யப்பட்டு பணப் பரிசுகள் உட்பட வெகுமதிகள் வழங்கப்பட்டதுடன், கலந்து கொண்ட அனைத்து அணிகளுக்கும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இதேபோன்று இந்த வருடமும் போட்டிகள் ஆரம்பிக்கப்கப்பட்டு, கடந்த 2 மாதங்களாக ஆரம்பக் கட்ட சுற்றுகள் நடைபெற்ற நிலையில், இறுதிப் போட்டி நாளை(ஞாயிற்றுக்கிழமை), நோர்த்ஹேட் விடுதியில் நடைபெற உள்ளது.

இறுதிப்போட்டியிலே பங்கு பற்றும் 12 தெரிவு செய்யப்பட்ட அணிகள் தமது செயலிகளை பற்றிய விளக்கங்களை வழங்க இருப்பதுடன் நடுவர்கள் அவற்றை மதிப்பீடு செய்து வெற்றியாளர்களைத் தெரிவுசெய்ய உள்ளனர். அதுமட்டுமல்லாது உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து சேல்ஸ்போர்ஸ் வல்லுநர்கள் நிகழ்நிலை மூலமாக இணைந்து சேல்ஸ்போர்ஸ் பற்றிய விளக்கங்களையும், உலக சந்தையில் சேல்ஸ்போர்ஸ் தொழில்நுட்பத்துக்கு உள்ள வாய்ப்புகள் பற்றிய விளக்கங்களை வழங்க உள்ளனர். காலை 8.30 மணி முதல் நடைபெற உள்ள இந்த நிகழ்வில் மதியம் ஒரு மணியில் இருந்து பார்வையாளர்கள் இலவசமாக அனுமதிக்கப்படுவர்.

இந்த நிகழ்வில் பங்குபற்றுவதன் மூலம், சேல்ஸ் போர்ஸ் பற்றிய பல்வேறுபட்ட விடயங்களைத் தெரிந்து கொள்ளக் கூடியதாக இருப்பதுடன், மாணவர்களுக்கு இந்த துறையில் இருக்கும் வாய்ப்புகள் பற்றியும் அறிந்து கொள்ள முடியும். தகவல் தொழில்நுட்ப துறையில் சாதிக்க விரும்புபவர்களுக்கும், இத்துறையைத் தமது எதிர்காலமாக கொள்ள எதிர்பார்ப்பவர்களுக்கும், வேலை வாய்ப்புகள் மற்றும் தொழில் முயற்சியில் ஈடுபட விரும்புவர்களுக்கும் இது ஒரு மகத்தான வாய்ப்பு ஆகும். இது பற்றிய மேலதிக விவரங்களை எமது உத்தியோக பூர்வ இணையத்தளமான yarlsfo.org யிலும், ஏனைய சமூக வலைத்தள பக்கங்களுக்கு செல்வதன் மூலமும் தெரிந்து கொள்ள முடியும். ஆர்வமுள்ளவர்கள் இந்நிகழ்விலே கலந்துகொண்டு உச்சக்கட்ட பயனை பெற்று கொள்ளமுடியும். – என்றனர்.

# நிந்தவூரில் பள்ளிவாசல் நேற்றுத் திறந்து வைப்பு





(கே எ ஹமீட்)

நிந்தவூர், முதலாம் பிரிவு மீரா நகர் பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நிந்தவூர் மஸ்ஜித் அல் பாறூக் பள்ளிவாசல் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது

நிந்தவூர் மஸ்ஜித் அல் பாறூக் ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் தலைவர் ஏ.ஜி.பிர்தௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம் .அப்துல் லத்தீப் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வைப்பவர் ரீதியாக திறந்து வைத்தார்.

சவுதி அரேபியாவை சேர்ந்த இப்றாகீம் ஹலீல் அல் பலவி என்பவரது நிதி உதவியில் உலக முஸ்லிம் லீக் நிறுவனத்தின் ஊடக நிர்மாணிக்கப்பட்ட இந்தப் பள்ளிவாசல் திறப்பு விழாவில் முஸ்லிம் வேர்ல்ட் லீக் நிறுவனத்தின் பணிப்பாளர் ஜே.எம்.இம்றான், நிந்தவூர் ஜம்மியத்துல் உலமா சபையின் தலைவர் மௌலவி அல்–ஹாஜ் என் இஸ்மத் (சர்கி), செயலாளர் மௌலவி ஏ எம் ஆஷிக் அலி, நிந்தவூர் ஜும்மா பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையில் தலைவர் அல்–ஹாஜ்.எம்.பி.எம்.பாறூக் இப்றாகீம், செயலாளர் மௌலவி. எம் எம் கமர்தீன் மற்றும் ஊர்ப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# சீன கரிம உரக் கப்பலின் பிரச்சினை விவாதிக்க சிறப்பு அதிகாரி நியமனம்!



சீன கரிம உரங்களை ஏற்றுமதி செய்தமை மற்றும் இலங்கை அரசாங்கம் செலுத்திய 67 லட்சம் டொலர்கள் தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையில் இராஜதந்திர ரீதியிலான தீர்வை வெளிவிவகார அமைச்சு கோரவுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் இராஜதந்திர ரீதியில் தீர்வு காண்பதற்கு விசேட அதிகாரி ஒருவரை வெளிவிவகார அமைச்சு நியமித்துள்ளது.

விவசாய அமைச்சின் அதிகாரிகள் அந்த அதிகாரிக்குத் தேவையான அனைத்து ஆதரவையும் வழங்குவார்கள் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி ஆகியோருக்கு இடையில் கடந்த வியாழக்கிழமை விவசாய அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இந்த முடிவை அறிவித்தார்.

சீன கரிம உரத்தின் கப்பல் ஏற்றம் குறித்து இலங்கைக்கும் சீன அரசாங்கத்துக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை சேதப்படுத்தாத வகையில் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு வெளிவிவகார அமைச்சரின் ஆதரவை வழங்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, முன்னர் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கரிம உரக் கப்பல் தொடர்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படாமல் தடுப்பதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் மஹிந்த அமரவீர வலியுறுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

உரிய அனுமதிப்பத்திரங்களை அங்கீகரித்ததன் பின்னர், சதொச நிறுவனங்களில் மதுபான விற்பனை நிலையங்களை திறக்கவும் கலால் ஆணையாளர் நாயகம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

## தமிழக அரசை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடைக்கப்பட்டிருந்தவர்களை இந்திய உச்ச நீதிமன்றம் அவர்களின் நன்னடத்தை அடிப்படையில் விடுதலை செய்திருப்பதை அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு மகிழ்ச்சியோடு வரவேற்றுப் பாராட்டுகின்றது.

இவர்களுடைய விடுதலைக்காகப் பாடுபட்ட தமிழக அரசு உட்பட அனைத்துத் தரப்பினருக்கும் நன்றியையும் தெரிவிக்கின்றது.

இந்த வழக்கின் தீர்ப்பை முன் மாதிரியாகக் கொண்டேனும் இலங்கை சிறைகளில் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் 12 ஆயிரம் முன்னாள் போராளிகள் சமூக மயமாக்கப்பட்டனர் என்று கூறப்படுகின்றது. கைது செய்யப்பட்டு குறுகிய காலத்திலேயே நன்னடத்தையாளர்களாக அடையாளம் காணப்பட்டு இவர்கள் சமூக மயமாக்கப்பட்டனர்.

தொடர்ந்து அரசியல் கைதிகளின் நன்னடத்தை அடிப்படையில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த போது அவரைக் கொலை செய்வதற்காக முயற்சித்தவர் எனப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த ஒருவர் விடுதலை செய்யப்பட்டார்.

அதேபோன்று கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி காலத்திலும் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட 16 பேர் விடுவிக்கப்பட்டதையும் நாம் அறிவோம்.

தற்போதைய ஜனாதிபதியும் அண்மையில் சிலருக்கு விடுதலைக்கு அனுமதி அளித்திருந்தார். இதற்கு இவர்களின் நன்னடத்தையும் ஒரு காரணமாகும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தற்போது நீண்ட காலம் சிறைகளில் வாடும் அரசியல் கைதிகள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் எந்தவொரு காலகட்டத்திலும் சிறைச்சாலை நிர்வாகத்துக்கு எதிராகவோ, அரசுக்கு எதிராகவோ எதனையும் செய்யவில்லை. நன்னடத்தை மிக்கவர்களாகவே காணப்பட்டுள்ளனர்.

அரசியல் கைதிகள் தங்களின் விடுதலையை வலியுறுத்தி நிர்வாகத்துக்கு முன் அறிவிப்பு செய்தே பல்வேறு கால கட்டங்களில் சிறைச்சாலைப் பொருட்களுக்கோ அல்லது வேறு எதற்குமோ எந்தவிதமான சேதங்களையும் ஏற்படுத்தாது அமைதிப் போராட்டங்களையே நடத்தியுள்ளனர்.

இந்தப் போராட்ட காலத்தில் சிறந்த ஒழுக்க நெறியை இவர்கள் கடைப்பிடித்துள்ளனர். தொடர்ந்து சிறைச்சாலை நிர்வாகத்தின் நன்மதிப்பைப் பெற்றவர்களாகவே உள்ளனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள அரசியல் கைதிகளில் பலர் ஒப்புதல் வாக்கு மூலமே குற்றவாளிகள் ஆக்கப்பட்டு தண்டனை அனுபவிப்பவர்களாக உள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டும், தமிழக அரசைப் போன்று தமிழ் மக்களின் நீண்ட காலக் கோரிக்கையான அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் எனும் குரலுக்குச் செவிமடுத்தும், அரசியல் கைதிகளின் நன்னடத்தையை அடிப்படையாகக் கொண்டும் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய அரசு அவசர நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முயலும் அரசு அந்த மக்களின் நீண்ட காலப் பிரச்சினைகளில் ஒன்றானதும் அரசியல் பிரச்சினையோடு நேரடி தொடர்புபட்டதுமான அரசியல் கைதிகளின் விடுதலை பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருதல் வேண்டும். அதுவே அரசு மீதான நம்பிக்கைக்கு வழி வகுக்கும்.

நாடு பொருளாதார வீழ்ச்சியடைந்திருக்கும் இந்த நேரத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கும் இவ்வேளையில் அதற்குத் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை துணை செய்யும் – என்றுள்ளது.

## போலி உறுதி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

20 இற்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் முன்னிலையாகி முன்வைத்த பிணை விண்ணப்பம் மீது எதிர்வரும் நவம்பர் 21ஆம் திகதி கட்டளை வழங்கப்படும் என மன்று தவணையிட்டது.

யாழ்ப்பாணம் மாநகர் அராலி வீதி – பொம்மைவெளிப் பகுதியில் உள்ள காணி ஒன்று அதன் இறந்து விட்ட உரிமையாளர்களான தம்பதியின் போலிக் கையொப்பங்கள் மூலம் நிறைவேற்றப்பட்ட உறுதியால் மோசடியாக உரிமை மாற்றம் செய்யப்பட்டது. அது தொடர்பாக யாழ்ப்பாணம் சிறப்பு குற்ற விசாரணைப் பிரிவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை நடத்திய பொலிஸார், கடந்த மாதம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கைத் தொடுத்து சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்து மன்றில் முற்படுத்தினர். பொலிஸாரின் புலன் விசாரணைகள் நிறைவடையாத நிலையில் சந்தேகநபர் கடந்த ஒரு மாத மாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்குடன் தொடர்புடைய உறுதியை நிறைவேற்றிய நொத்தாரிசான சட்டத்தரணி ஒருவரும், மற்றைய சந்தேகநபரான யாழ்ப்பாணம் பிரபல கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி கையூட்டுக் குற்றச்சாட்டில் சிக்கிக்கொண்டு பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்ட ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

இருவரும் நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட 9 சந்தேக நபர்களும் நேற்று முற் படுத்தப்பட்டனர்.

முதலாம், இரண்டாம் சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி பி. அபிதனின் அனுசரணையில் மூத்த சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா முன்னிலையானார்.

3ஆம், 5ஆம், 6ஆம் சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி ரமணனும், 6ஆம். 7ஆம், 8ஆம் சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி ரஜிந்தனின் அனுசரணையில் மூத்த சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகமும், 9ஆவது சந்தேகநபரான நொத்தாரிசான சட்டத்தரணி சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எஸ்.பரமராஜா, மூத்த சட்டத்தரணி எம். றெமிடியஸ் உள்ளிட்ட 15 இற்கும் மேற்பட்ட சட்டதரணிகளும் முன்னிலையாகினர். விசாரணைகள் தொடர்பில் மன்றில் மேலதிக அறிக்கையைச் சமர்ப்பித்த யாழ்ப்பாணம் சிறப்பு குற்ற விசாரணைப் பிரிவினர், புலன் விசாரணைகள் நிறை வடையாத நிலையில் சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்க விண்ணப்பம் செய்தனர்.

சந்தேகநபர்கள் 9 பேர் சார்பிலும் முன்னிலையான சட்டத்தரணி பிணை விண்ணப்பத்தை முன்வைத்து நீண்ட சமர்ப்பணத்தை முன்வைத்தனர்.

இந்த வழக்கில் உள்ள 9 சந்தேக நபர்களும் பிணை வழங்கப்படும் போது புலன் விசாரணைகளுக்கு தடையோ, இடையூறோ ஏற்படுத்தமாட்டார்கள்.

இந்த வழக்கின் புலன் விசாரணைகளை முன்னெடுத்து குற்றச்சாட்டுக்களை முன்வைக்க சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்படவேண்டும்.

அந்தப் படிமுறைகளை முன்னெடுக்க நீண்ட காலமாகும். அதனால் சந்தேகநபர்களைப் பிணையில் விடுவிக்க வேண்டும் என்று சாரப்பட நீண்ட சமர்ப்பணத்தை முன்வைத்தனர்.

இரு தரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்து எதிர்வரும் 21ஆம் திகதி கட்டளை வழங்கப்படும் என்று தவணையிட்ட மன்று அன்று வரை சந்தேகநபர்கள் 9 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

## வாவியில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணாமல்போனோர் மூன்று சிறுமிகளைத் தேடும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

18, 17 மற்றும் 10 வயதுடைய சிறுமிகளே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

இவர்கள் குருநாகல் பிரதேசத்தில் வசிப்பவர்கள் என்றும், உறவினர் நிகழ்வு ஒன்றுக்காக இந்தப் பகுதிக்கு வந்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீன்பிடிக்கப் பயன்படுத்தப்படும் சிறிய படகில் 8 பேர் பயணித்ததால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் கூறியுள்ளனர்.

அப்போது வாவியின் நடுவே படகு கவிழ்ந்தது என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## கடலில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

50 வயதுடைய நபரே இவ்வாறு காணாமல்போயுள்ளார்.

குறித்த மீனவர் கடந்த செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதி 'ஹிருன் சோன் 2' என்ற கப்பலில் ஐந்து மீனவர்களுடன் மீன்பிடிக்கச் சென்றுள்ளார்.

அவர் நேற்றிரவு மீன்பிடித்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்த போது கடலில் விழுந்தார் என்று படகின் உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பேருவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஜனாதிபதிக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல்வர் மு.க. ஸ்டாலினையும், கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரின் ஊடாகக் கோருகின்றேன். பெருந்தோட்டத் துறையில் நிலைமை மோசமடைந்து பட்டினிச் சாவு ஏற்பட முன் இனியும் தாமதிக்காமல் இந்த நடவடிக்கை அவசர நிலையாகக் கருதி முன்னெடுக்கப்பட வேண்டும்.

–இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

இலங்கையில் வறுமை பற்றிய கணக்கெடுப்பு அறிக்கையில் உலக வங்கி, இலங்கையின் தேசிய வறுமை மட்டம் 26 விகிதமாக உயர்ந்துள்ள வேளையில் பெருந்தோட்டத் துறையில் வறுமை 53 விகிதமாக அதீதமாக உயர்ந்து இருக்கின்றது.

அதேவேளை, ஐ.நா. உலக உணவு நிறுவனத்தின் இலங்கை பற்றிய அறிக்கையில் 'உணவின்மை', நகரத் துறையில் 43% என்றும், கிராமிய துறையில் 34% என்றும், பெருந்தோட்டத் துறையில் 51% என்றும் கூறுகின்றது.

ஆகவேதான், மத்திய, ஊவா, சப்ரகமுவ, தென் முதல், மேல் மாகாணகளுத்துறை, கொழும்பு மாவட்ட அவிசாவளை வரை படர்ந்துள்ள பெருந்தோட்டத்துறை மக்கள் வாழும் குடியிருப்புக்களை 'நலிவுற்ற' பிரிவாக அறிவித்து, அதற்கான விசேட ஒதுக்கீட்டு வளர்ச்சித் திட்டங்கள் அமுல் படுத்த வேண்டும்.

நம் நாட்டில் இன்று நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள, உணவின்மை பிரச்சினையால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள இந்திய வம்சாவளி மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு விசேட உதவிகளை வழங்கிட இந்திய மத்திய அரசும், தமிழக மாநில அரசும் முன்வர வேண்டும்.

இலங்கை முழு நாட்டுக்கும் இந்திய மத்திய அரசு வழங்கிடும் உதவிகள், மிகவும் நலிவுற்ற நிலையில் வாடும் இந்திய வம்சாவளி பெருந்தோட்ட மக்களுக்கு முறையாக கிடைப்பதில்லை என்பதை மிகவும் பொறுப்புடன் இந்திய அரசின் கவனத்துக்குக்கொண்டு வர விரும்புகின்றேன்.

பெருந்தோட்டத் துறையில் நிலைமை மோசமடைந்து பட்டினிச் சாவு ஏற்பட முன் இனியும் தாமதிக்காமல் இந்திய வம்சாவளி பெருந்தோட்ட மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும் – என்றார்.

- விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம் -
076 443 8622




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.11.2022 இல் வெளியிடப்பெற்றது.